OS.No. 436/2020

Dated : 06.02.2024

Time:  12.20 pm to  12.50  p.m

P.W- 1 சாட்சி சசிராம் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 5 ஆம் பிரதிவாதி  சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

1) 25.03.1971 ஆம் தேதிலேயே திருமூர்த்தி உடையாரும், அவருடைய 3 மகன்களுமான குமாரவேலு, வீராசிகாமணி, பன்னீர்செல்வம் ஆகியோர் பாக பத்திரம் மூலம் பாகம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். பன்னீர்செல்வம் இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் மனைவி, மற்றும் மகளான 3,4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தை அனுசரித்து அவர் அவர் தனித்தனி அனுபவத்தில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் திருமூர்த்தி உடையார் பெரியவர் என்பதால் அவர் இருக்கும்வரை எல்லோரும் ஒன்றாகத்தான் இருந்தார்கள்.

2) நான் சொல்வது போன்று திருமூர்த்தி உடையாரின் பெண் வாரிசுகள் யாரும் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்ததே இல்லை என்றும் அதற்கான ஆவணம் எதையும் முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல. ராஜகண்ணி என்பவர் தாவா சொத்தில் தான் வசித்து வந்தார். ராஜகண்ணி என்பவர் தாவா சொத்தில் எப்போதும் அனுபவத்தில் இருந்ததே இல்லை என்றால் அது தவறு. ஆவணம் உள்ளது. 3ம் பிரதிவாதி சாந்தி 2013 ஆம் ஆண்டு தன்னுடைய மகள் 4ம் பிரதிவாதிக்கு ஒரு தான பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

3) 4ம் பிரதிவாதி சந்தியா 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி 5 ஆம் பிரதிவாதிக்கு ஒரு கிரய பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் இருந்து 5ம் பிரதிவாதி தான் அந்த சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றால் அது தவறு. அவர் அனுபவத்தில் இல்லை. மேற்படி திருமூர்த்தி உடையாரின் பெண் மக்கள் அனைவரும் 1989 க்கு முன்பே திருமணமாகிவிட்டது என்றால் அது தவறு. மதி என்பவருக்கு அதன் பிறகுதான் திருமணம் நடந்தது. தாவா பி அட்டவணை சொத்தில் அரசுக்கு சொந்தமான சர்வே எண். 200/1/பி என்பது விளையாட்டு மைதானம்

என உள்ளது என்றும் ஆனால் அதையும் சேர்த்து குறுக்கு வழியில் நான் பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது தவறு.

4) 3ம் பிரதிவாதி தனது கணவர் வழியாக பாத்தியப்பட்ட சொத்தை மட்டும்தான் அவரது மகளுக்கு தானமாக கொடுத்தார் என்றால் அதை மறுக்கிறேன். தாத்தா வழி சொத்தான பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட சொத்தையும் சேர்த்து தானம் கொடுத்துவிட்டார். 4ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தைதான் 5ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்தார் என்றால் அது தவறு. 1,2 பிரதிவாதிகள் 3,4 விாதிவாதிகளிடம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்ய கேட்டார் என்றும் அவர்கள் மறுத்தால் அவர் உதவியுடன் சேர்த்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது தவறு. 4ம் பிரதிவாதியிடமிருந்து 5ம் பிரதிவாதி நல்லெண்ணத்தில் அடிப்படையில் கிரயம் பெற்றவர் என்று சொன்னால் அது தவறு. 5ம் பிரதிவாதி பெற்ற கிரயம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**3,4,6** பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை

5) திருமூர்த்தி உடையார் 1971 ல் காலமானார். அவர் இறந்த பிறகு அவருடைய பெண் வாரிசுகள் பெயர் வருவாய் ஆவணம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே அவருடைய மகன்கள் இடையே பதிவு செய்யப்பட்ட பாகபத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 30.03.2015ல் 1,2 பிரதிவாதிகள் 1971 ஆம் ஆண்டு திருமூர்த்தி உடையாருக்கு பாகம் மூலம் வந்த சொத்தின் ஒரு பகுதியை பாண்டுரங்கன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகத்திற்கு பிறகு திருமூர்த்தி உடையாரின் மகன்கள் 1,2 பிரதிவாதிகள் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டதை அனுசரித்துதான் அந்த பாகம் ஏற்படுத்தினார்கள் என்றால் சரிதான். அதனால் தான் குறிப்பிட்ட 4 புற எல்லைகளுடன் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

6) அவ்வாறு விற்பனை செய்த மேற்படி சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேலும் கிரயம் பெற்ற பாண்டுரங்கனையும் இவ்வழக்கில் தரப்பினராக

சேர்க்கவில்லை. மேற்படி 1,2 பிரதிவாதிகள் வாய்மொழியாக ஏற்கனவே பாகம் ஏற்படுத்திக்கொண்ட விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதனால் தான் அவர்கள் விற்பனை செய்த சொத்தையும் அவர்களிடம் கிரயம் பெற்ற நபரையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இவ்வழக்கு பகுதி பாக பிரிவினையாலும், அவசியமான தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கும் இவ்வழக்கு உள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் தான் 5ம் பிரதிவாதிக்கு பாண்டுரங்கனுக்கு விற்பனை செய்தது போலவே அவர்களும் 4 புற எல்லை வகுத்து விற்பனை செய்தார்கள் என்றால் சரியல்ல.

7) 3,4 பிரதிவாதிகள் அவர்களுடைய சொத்துக்கள் அளவில் 6ம் பிரரிதவாதிக்கு பொது அதிகாரம் பத்திரம் எழுதி கொடுத்து அவர் பராமரிப்பில் சொத்து உள்ளது என்றால் அது தவறு. 3 பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தானமும், 4ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரய பத்திரமும் செல்லும் என்னை கட்டுப்படுத்தும் என்றால் அது தவறு. மேற்படி 1,2 பிரதிவாதிகள் தூண்டுதலால் இவ்வழக்கு தாக்கல் செய்யதுள்ளதால் அவர்கள் விற்பனை செய்த சொத்தையும், கிரயம் பெற்ற பாண்டுரங்கனையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது தவறு. மேற்படி பன்னீர்செல்வம் இறந்துவிட்டதால் அவருடைய சொத்தை அபகரிக்கத்தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/- K.Ananthan
**Subordinate Judge,**
**Attur.**